பெரியவர் திரு. மோகன் கந்தசாமி, சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் சேர்ந்து, எங்களைப் போன்ற மற்ற கட்சியினரையும் அழைத்துச்சென்று, தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்து, விற்பனை வரியைக் குறைக்கச் செய்து ஒரு நல்ல புத்துயிரை அந்தக் காலத்திலே பெற்றார்கள். ஆகவே, மீண்டும் கலைஞர் ஆட்சி வந்திருக்கின்ற காரணத்தினால், இந்த ஆட்சியில் உள்நாட்டு விற்பனை பின்னலாடைக்கு, வரிக் குறைப்பு செய்யப்படுமா? மேலும், இந்தத் தொழில் அபிவிருத்திக்கு விற்பனை வரித் துறையின்மூலம் வரிச் சலுகைகள் பல்வேறு வகையில் அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலேயே நான் குறிப்பிட்டேன். இது உள்நாட்டு விற்பனை, வெளிநாட்டு விற்பனை என்று பிரித்து அறிவதிலே சிக்கல் ஏற்படும் என்கிற காரணத்தினாலே, இதில் தொடர்ந்து இதேநிலை நீடிக்கப்படும். இது ஒரு சதவிகித அளவிற்குத்தான் வரி என்பது கணக்கிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பெப்சி, கோகா-கோலா குளிர் பானங்களைத் தடை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம்... (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். ஓர் உறுப்பினர் எழுந்து நின்று பேசும்போது இன்னொருவர் குறுக்கிடாதீர்கள். உட்காருங்கள்.

2006 ஆகஸ்ட் 8]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியா முழுக்க பெப்சி, கோகா—கோலா போன்ற குளிர் பானங்கள் தடை செய்யப்பட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் இருந்து வந்து கொண்டிருக்கிறது. பல மாநிலங்களிலே பொதுவாக குஜராத், இராஜஸ்தான், சட்டீஸ்கர், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலே அவை தடை செய்யப்பட்டிருக்கின்றன. நச்சுப் பொருளை அதிகமாகக் கொண்டிருக்கின்ற இந்த கோகா—கோலா, பெப்சிக்கு தமிழகத்திலும் நம்முடைய முதல்வர் அவர்கள், தடையைக் கொண்டு வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை கொண்டுவருவதில் எந்தத் தடையுமில்லை. ஆனால் ஒன்று, இங்கே தடை செய்து, பாண்டிச்சேரியில் விற்றால் என்ன செய்வது? இங்கே தடை செய்து வேறு மாநிலத்திலே விற்றால் என்ன செய்வது? ஆகவே, ஏக இந்தியாவை சிந்திக்கின்ற நாம், ஏக இந்திய அளவில் இந்தத் தடை வருமேயானால், அதை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) கரூர் தொகுதியில் மணல் எடுப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதியில், இன்று கரூர் தாலுக்கா அலுவலகம் முன்பு, 5 ஊராட்சிகளுக்குட்பட்ட பொதுமக்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவுகிறது. காரணம் கரூர் சட்டமன்றத் தொகுதியிலே, ஆண்டாள் கோவில் மேல்பாகம் ஊராட்சி, ஆண்டாள் கோவில் கீழ்பாகம் ஊராட்சி, கருப்பம்பாளையம் ஊராட்சி, அப்பிபாளையம் ஊராட்சி, விசுவநாதபுரம் ஊராட்சி ஆகிய 5 ஊராட்சிகளுக்குட்பட்ட 12 கிணறுகள் அமைந்துள்ள இடங்களிலும், விவசாயத்திற்கு நீர் எடுத்துச் செல்லப்படும் கிணறுகள் அமைந்துள்ள இடங்களிலும் பொதுப் பணித் துறைமூலம் அரசு மணல் எடுத்து வருகிறது. இவ்வாறு மணல் எடுப்பதைத் தடைசெய்ய வேண்டுமென்று ஐந்து ஊராட்சி மன்றங்களாலும் தீர்மானம் இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், மணல் எடுப்பதைத் தமிழக அரசு நிறுத்தவில்லை. அந்தப் பரபரப்பான